# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## துரித கற்றல் கையேடு தரம் :~ 04
## தமிழ்

அடைமொழிகள்

- ஒரு சொல்லை சிறப்பித்துக் கூறபயன்படும் சொற்கள் அடைமொழிச் சொற்களாகும்.
- அடைமொழிகள் மூன்று வகைப்படுகின்றது.

1. எழுவாய் அடைமொழி
2. பயனிலை அடைமொழி
3. செயப்படுபொருள் அடைமொழி

எழுவாய் அடைமொழியை பெயர் அடைமொழியென்றும்
பயனிலை அடைமொழியை வினை அடைமொழி என்றும் கூறலாம்.

உ + ம் 1. கறுப்புப் பூனை பால் குடித்தது

1. எழுவாய் :- பூனை (எது குடித்தது?)

எழுவாய் அடைமொழி :- கறுப்பு (பூனை என்பதை சிறப்பிக்கும் சொல்)

உ + ம் 2 மேரி வீட்டிற்கு விரைவாக நடந்தாள்

1. பயனிலை :- நடந்தாள் (கருத்து முற்றுப் பொற்ற இடம்)

பயனிலைஅடைமொழி :- விரைவாக ( நடந்தாள் என்பதை சிறப்பிக்கும் சொல்)

1. எழுவாய் அடைமொழிச் சொல்லின் கீழ் கோடு வரைவோம்.

1. அழகான மயில் ஆடியது
2. வெள்ளைப் பூனை பால் குடித்தது
3. சின்னப் பையன் பாய்ந்து வந்தான்
4. வெள்ளை முயல் ஓடியது
5. கறுப்புக் காகம் பறந்தது
6. பெரிய யானை வந்தது
7. பச்சைக் கிளி பறந்தது.
8. குள்ள மனிதன் வந்தான்

2. பயனிலை அடைமொழிச் சொல்லின் கீழ் கோடு வரைவோம்.

1. கன்றுக்குட்டி வேகமாக ஓடியது.
2. மாணவன் மெல்ல நடந்தான்
3. பறவைகள் உல்லாசமாகப் பறந்தன.
4. கண்ணன் உணவை மென்று உண்டான்
5. தம்பி பந்தை மெதுவாக உருட்டினான்
6. தோட்டத்தில் பூக்கள் அழகாகப் பூத்திருந்தன
7. காற்று வேகமாக வீசியது
8. கொரோனா விரைவாகப் பரவியது
9. கிளி மாம்பழத்தைத் கொத்தித் தின்றது.
10. பூனை பாலை ருசித்துக் குடித்தது

3. பொருத்தமான அடைமொழிகளை இட்டு வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.

1. ……………. கொக்கு மீனைக் ………………. தின்றது.
2. ……………. தம்பி சோற்றை ………………… உண்டான்.
3. …………….. முயல் பாதையைக் ……………. ஓடியது.
4. ……………… மரம் …………….. விழுந்தது
5. ………………. குதிரை ……………….. ஓடியது.
6. ……………………யானை ……………………………… வந்தது
7. ……………………வண்டு தேனை ………………….. குடித்தது
8. ………………….. கோழி எள்ளைக் ……………….தின்றது.
9. ..........................மான் …………… ஓடியது
10. ………….. பாம்பு ……………. ஊர்ந்தது.

விகடத்துணுக்கு

ஆசிரியர் :- ஆனி முடிந்தல் ஆடி வரும், ஆடி முடிந்தல் என்ன வரும்?

மாணவன் :- கால்வலிக்கும்